மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. கா. ராமசந்திரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிச்சயமாக, எதிர்காலத்தில் பரிசீலனை செய்து அதைத் தூர் வாருவதற்கு என்ன செய்ய வேண்டுமோ, அதுகுறித்து நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 156, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா, மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

156—

துணை மின் நிலையம்

***1637—டாக்டர் வை. முத்துராஜா:**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) புதுக்கோட்டை மின்பகிர்மான வட்டம், கருக்காக்குறிச்சியில் 110 KV துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி, மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) 6–4–2023 அன்று உச்சபட்ச மின்நுகர்வாக 12,252 MW–ஆக இருந்த நிலை, நேற்று 18,667 MW–ஆக உயர்ந்துள்ளது. அதேபோல, ஒருநாள் பயன்பாடு என்பது, 11–4–2023 அன்று 397 மில்லியன் யூனிட்டாக இருந்தது என்று நேற்று அவையிலே சொல்லியிருந்தேன். நேற்று, 12–4–2023 அன்று, ஒருநாள் பயன்பாடு 399 மில்லியன் யூனிட்டைக் கடந்து உச்சபட்ச ஒருநாள் பயன்பாட்டிற்கு மின்சார வாரியம் தடையில்லாமல் மின்விநியோகம் செய்திருக்கிறது.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், புதுக்கோட்டை மாவட்ட மின்பகிர்மான வட்டத்தில், கருக்காக்குறிச்சியில் புதிய 110 KV

2023 ஏப்ரல் 13]

துணை மின் நிலையம் வேண்டுமென்று கேட்டிருக்கிறார். ஆய்வு செய்யப்பட்டதில், அந்த இடத்தில் தற்சமயம் துணை மின் நிலையம் தேவையில்லை என்று அறிக்கை வந்திருக்கிறது. ஆகையால், வருகின்ற ஆண்டுகளில் தேவைக்கேற்ப அரசு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதி, கறம்பக்குடி ஒன்றியம், கருக்காக்குறிச்சி மற்றும் அதன் சுற்றுவட்டாரப் பகுதிகளில் விவசாயிகள் மற்றும் பொதுமக்களின் மின் பற்றாக்குறையைப் போக்கும் வகையில், கருக்காக்குறிச்சியில் புதிய 110 KV திறன் கொண்ட துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மின்சாரம் தங்குதடையின்றி கிடைக்கும். தற்போது கறம்பக்குடி துணை மின் நிலையத்திலிருந்து கருக்காக்குறிச்சி, கருகீழ்த்தெரு, கருவடத்தெரு, குரும்பிவயல், முள்ளங்குறிச்சி, சூரக்காடு, கோட்டைக்காடு, வனக்கன்காடு, திருமணஞ்சேரி ஆகிய பகுதிகளுக்கு மின்சாரம் செல்கிறது. கருக்காக்குறிச்சியில் துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான அரசு இடமும் உள்ளது. அந்த இடத்தைத் தேர்வு செய்து, நடப்பு நிதியாண்டில் நிதி ஒதுக்கீடு செய்து அங்கு துணை மின் நிலையம் அமைத்துக் கொடுத்தால், அதன் சுற்றுவட்டாரப் பகுதியிலுள்ள விவசாயிகள் மற்றும் பொதுமக்களுக்கு தங்குதடையின்றி மின்சாரம் வழங்க வழிவகை செய்யலாம் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதியில், சின்னையாசத்திரம் பகுதியில் 110 KV துணை மின் நிலையம் அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒப்புதல் வழங்கியிருக்கின்றார்கள். மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டியிருக்கக்கூடிய கருக்காக்குறிச்சியில், துறையின்

சார்பாக ஆய்வு செய்யப்பட்டது. ஆய்வின் அடிப்படையில் அந்த இடத்தில் தற்சமயம் துணை மின் நிலையம் தேவையில்லை என்று குறிப்பிட்டிருக்கின்றார்கள். ஆகவே, வரக்கூடிய ஆண்டுகளில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, முன்னுரிமை கொடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 10–25

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் வை. முத்துராஜா அவர்கள்.

டாக்டர் வை. முத்துராஜா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட, புதுக்கோட்டை ஒன்றியம், திருமலைராய சமுத்திரம் ஊராட்சி மற்றும் நகராட்சிக்குட்பட்ட சேங்கைதோப்பு, புல்லுபண்ணை ஆகிய பகுதிகளுக்கு திருவரங்குளம் rural feeder–கிராம மின் பாதையிலிருந்து கடந்த கால ஆட்சியில் மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வந்தன. நமது கழக ஆட்சி அமைந்தவுடன், இப்பேரவையில் மக்களின் நீண்ட நாள் கோரிக்கையினை மாண்புமிகு முதல்வர் அவர்களின் கவனத்திற்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்கும் கொண்டு சென்றேன். உடனடியாக பணிகள் தொடங்கப்பட்டு, திருவரங்குளம் கிராமிய மின் பாதையிலிருந்த மின் இணைப்புகளை மாற்றி, புதிதாக புதுக்கோட்டை நகர்ப்புரத்திற்கு 24 மணி நேர மும்முனை மின்சாரம் வழங்கியது நமது கழக அரசு. அதற்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். தற்போது அப்பகுதியில் வசித்துவரும் சுமார் 500–க்கும் மேற்பட்ட குடும்பங்கள் மின்சாரக் கட்டணம் செலுத்த 10 கிலோ மீட்டருக்கு மேல் உள்ள திருவரங்குளம் செல்லும் நிலை உள்ளது. மேற்கண்ட, கிராம ஊராட்சி மற்றும் நகர்ப் பகுதியை, புதுக்கோட்டை நகராட்சி மின்வாரியத்தில் இணைத்துக் கொடுத்தால், மக்களுக்கு சிரமமின்றி இருக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடத்தில் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

2023 ஏப்ரல் 13]

மாண்புமிகு திரு. V. செந்தில்பாலாஜி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை இந்த ஆண்டே நிறைவேற்றப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 157, மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

157—

போக்குவரத்துப் பணிமனை

***10251—திரு. கடம்பூர் ராஜு:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கயத்தாறில் புதிய போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ்.எஸ். சிவசங்கர், போக்குவரத்துத் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

மாண்புமிகு உறுப்பினருடைய தொகுதியான கோவில்பட்டியிலேயே ஒரு பணிமனை இருக்கிறது. அவருடைய கோவில்பட்டி தொகுதிக்கு அருகிலே பல பணிமனைகள் இருக்கின்ற காரணத்தினால், கயத்தாறில் புதிய பணிமனை அமைக்க வேண்டிய தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதைப்போல, கோவில்பட்டியில் ஒரு பணிமனை இருக்கின்றது. அதற்கு அடுத்தபடியாக நான்குவழிச் சாலையிலே பிரதான நகரமாக கயத்தாறு இருக்கின்றது. அதற்கு 32 கிலோ மீட்டர் தொலைவில் திருநெல்வேலியிலே 4 போக்குவரத்துப் பணிமனைகள் இருப்பதாக சொல்லியிருக்கிறார்கள். ஆனால், அந்த 4 போக்குவரத்துப்*